கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/இரண்டாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு – 2015/2016
(மே 2018)

## DT 1212 Introduction to Traditional Theater Arts

நேரம் : 02 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியில் இருந்து எவையேனும் இரு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் இருந்து எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

---

### பகுதி – I

01. "பண்பாடு பற்றிய கல்விக்கும் பாரம்பரிய அளிக்கைக்கும் ஒரு தொடர்பு உண்டு" மேற்படி கூற்றினை கீழ்வரும் தலைப்புகளுக்கூடாக விளக்குக.

(அ) பண்பாட்டுப் படிப்பு என்பதன் மூலம் நீர் கருதுவது யாது? விளக்குக. (05 புள்ளிகள்)

(ஆ) பண்பாடு தொடர்பாக அறிஞர்கள் முன்வைக்கும் வரைவிலக்கணங்கள் ஐந்து தருக?

(05 புள்ளிகள்)

(இ) பாரம்பரிய நிகழ்த்துகைகளுக்கும் சமூகப் பண்பாட்டியல் அம்சங்களைக்கிடையிலான தொடர்பினை எடுத்துக்காட்டுக்கள் மூலம் தெளிவுபடுத்துக?

(10 புள்ளிகள்)

02. இலங்கையின் தமிழ் மரபுவழி நாடகங்களின் களஞ்சியம் மட்டக்களப்பு என்று போற்றப்படுகின்றது"

(அ) மட்டக்களப்பில் பயில் முறையில் பேணப்பட்டு வரும் பாரம்பரியக் கூத்துக்கள் ஐந்து குறிப்பிடுக?

(05 புள்ளிகள்)

(ஆ) இக்கூத்துக்களை மரபு வழிக்கூத்து எனக் குறிப்பிடுவதற்கான காரணத்தினை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) இத்தகைய மரபுவழிக் கூத்துக்களுக்குள் அண்மைக்கால அளிக்கையாளர்கள் செய்திருக்கும் மாற்றங்கள் தொடர்பாக கருத்துரை செய்க?

(10 புள்ளிகள்)

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம் முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு பொது கலைமாணித் தேர்வு

2015/2016 (May - 2018)

# PY- 1212 – பாரம்பரிய அளவையியல் வரலாறு மற்றும் அடிப்படை எண்ணக்கரு

# (HISTORY AND BASIC CONCEPTS OF FORMAL LOGIC)

நேரம் : 02 மணித்தியாலம்

பகுதி I இல் இரு வினாக்களையும் பகுதி- II இல் இரு வினாக்களுமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி-I

1. I எடுப்பு முரண்பாட்டு அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் எடுப்புக்களின் உண்மைப் பெறுமானங்களைத் தீர்மானிக்குக.

அ) மிருகங்கள் புல் உண்பவை அல்ல என்ற எடுப்பு உண்மையாக இருந்தால்

(I) சில மிருகம் புல் உண்பவை அல்ல
(II) மிருகங்கள் எல்லாம் புல் உண்பவை
(III) சில மிருகங்கள் புல் உண்பவை
(IV) மிருகங்கள் உள

(4 × 1 = 04 புள்ளிகள்)

II அனுபவத்தில் உண்மை காண முடியாத எடுப்பினை எடுப்பு முரண்பாட்டு சதுரத்தில் பிரயோகிக்கும் போது எழும் பிரச்சினைகளை மொழிநடை உதாரணந் தந்து விளக்குக.
(09 புள்ளிகள்)

III வெளிப்பேற்று அனுமானத்தின் அடிப்படையில் பின்வரும் வாதங்களின் வாய்ப்பினைத் துணிக .

அ) பொருட்கள் விலை அதிகம் இல்லை ஆகவே பொருட்கள் அல்லாதவை விலை அதிகம்.

ஆ) பண்பற்றவர்கள் எல்லோரும் அன்பானவர்களாகும் ஏனெனில் அன்பற்றவர்கள் எல்லோரும் பண்பானவர்கள் அல்ல என்பதனாலாகும்.

இ) காட்டு விலங்குகள் எல்லாம் வேகமாக ஓடுகின்றன என்பதிலிருந்து வேகமாக ஓடாத காட்டு விலங்குகள் அல்லாதன என்பதைப் பெற முடியும்